بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

அல்லாஹ் தஆலா தனது வாக்குறுதிக்கேற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரை அனுப்பி இஸ்லாத்தின் மறுமலர்ச்சியை துவக்கினான். 1400 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் புத்தும்புது வஹீ இறங்குகின்ற அந்த காலத்தைப் பெற்ற மக்கள் மிகவும் நற்பாக்கியம் பெற்ற மக்கள் ஆவர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்து அவர்கள் நேரடியாக இந்த அருள்களைப் பெற்றனர்.

இப்போது உலகில் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலைமைகளைப் பற்றி சுருக்கமாக எடுத்தக் கூற இருக்கின்றேன். எந்த அளவு விரைவாக உலகம் அழிவை நோக்கி செல்கின்றதென்றால் அதை கருத்தில் கொண்டவாறு ஜமாஅத் சகோதரர்கள் மிக அதிகமாக துஆ செய்ய வேண்டும்.அல்லாஹ் இந்த அரசாங்கங்களுக்கும் பெரும் சக்திகளுக்கும் அறிவை வழங்குவானாக. அவர்கள் உலகை அழிவின் பக்கம் கொண்டு செல்லாமல் இருக்கட்டும்.

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*

*அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 04.12.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ் தஆலா தனது வாக்குறுதிக்கேற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரை அனுப்பி இஸ்லாத்தின் மறுமலர்ச்சியை துவக்கினான். 1400 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் புத்தும்புது வஹீ இறங்குகின்ற அந்த காலத்தைப் பெற்ற மக்கள் மிகவும் நற்பாக்கியம் பெற்ற மக்கள் ஆவர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்து அவர்கள் நேரடியாக இந்த அருள்களைப் பெற்றனர். மனிதன் கற்பனை கண்கள் மூலமாக எவ்வாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபாக்கள் அவர்களுக்க அருகில் இருந்தவாறு தங்களது நற்பாக்கியத்தை எண்ணி எவ்வாறெல்லாம் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தியவாறு அவனைப் புகழ்ந்திருப்பார்கள் என்பதை பார்க்கும் போது உள்ளத்தில் வியக்கத்ததொரு நிலைமை இருக்கும். அல்லாஹ் எவ்வாறு தனது வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளான். அத்தகைய மக்களை பின்னவர்களிலும் நான் உருவாக்குவேன். அவர்கள் முன்னவர்களை சந்தித்து விடுவர் என்று அவன் கூறிய போது அதற்காக வஹீ மற்றும் இல்ஹாமின் புத்தம்புது அடையாளங்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உண்மைப் பேரன்பர் மூலமாக எடுத்துக் காட்டி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்தவர்களின் ஈமானை அவன் மிகவும் வலுவானதாக ஆக்கி விட்டான். இன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எந்த புத்தம் புதிய இல்ஹாம் இறங்கியுள்ளது என்பதைப் பற்றி தெரிந்து கொள்வோம் என்று கூறியவாரே அவர்கள் தங்களது ஒவ்வொரு காலை நேரத்தையும் துவக்கினர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எங்களது நிலை எப்படி இருந்தது என்றால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தொழுகைக்காக சென்றதுமே நாங்கள் ஓடிச்சென்று அவர்களது நோட்புக்கில் என்ன வஹீ எழுதப்பட்டுள்ளது என்பதை பார்க்க ஆரம்பித்தோம். அல்லது நாங்கள் பள்ளிவாசலுக்கே சென்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய அருளுக்குரிய நாவிலிருந்தே என்ன வஹீ இறங்கியது என்பதை தெரிந்து கொள்வோம்.

இந்த இன்பமும், ஆர்வமும் எங்களது ஈமானுக்கு மேலும் ஒளிவூட்ட வேண்டும். அதை வலுப்படுத்த வேண்டும் என்பதற்காகவே இருந்தது. அதன் அருள்களைப் பெற வேண்டும் என்பதற்காகவும் இருந்தது. மேலும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும். அவனை புகழ வேண்டும் என்பதற்காகவும் இருந்தது. அந்த இறைவன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது ஈமான் கொள்வதற்கான நல்வாய்ப்பை தந்தான். சில நேரங்களில் இவ்வாறும் நடந்துள்ளது. ஏதாவதொரு சஹாபி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அருகில் இருக்கும் இடத்திலேயே இல்ஹாம் இறங்கியது. அந்த நற்பாக்கியம் பெற்றவரும் அல்லாஹ்வின் வஹீயை கேட்டுக் கொண்டிருந்தார். சில சமயங்களில் இது போன்ற நிலைமையும் ஏற்பட்டது. அதாவது உடன் அமர்ந்திருப்பவரும் அந்த வஹீயை கேட்டார்.

அவ்வாறே ஒரு சஹாபி இருக்கும் போது இல்ஹாம் இறங்கியது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: எனக்கு நினைவில் இருக்கின்றது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வந்த ஒரு வஹீயின் துவக்கத்தில் அர்ரஹா என்ற வார்த்தை இருக்கும். பிறகு அந்த முழு வஹீயும் குறிப்பாக ஒரு ருகூவிற்கு சமமானதாக இருக்கும். அந்த வஹீ எப்போது இறங்கியது என்றால் அப்போது ஹுஸூர் (அலை) அவர்களுக்கு சிறுநீரகத்தில் வலி இருந்து வந்தது. செய்யது ஃபஸல் ஷா சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது உடலை அமுக்கி கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு இந்த சிறப்புத்தன்மை

கிடைத்தது. ஹஸ்ரத் சாஹிபின் உடலை அமுக்கிக் கொடுத்துக் கொண்டிருக்கும் நிலையில் ஹுஸூர் (அலை) அவர்கள் மீது இந்த வஹீ இறங்கியது. வஹீயும் எவ்வாறு வந்தது என்றால் சில நேரங்களில் உரத்த குரலில் ஹுஸூர் (அலை) அவர்களது நாவின் மூலம் அந்த சொற்கள் வெளிப்படும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எனக்கு நன்றாக நினைவில் இருக்கின்றது. நாங்கள் சிறுவர்களாக இருந்தோம். நாங்கள் முன்னெச்சரிக்கையின்றி அந்த அறையில் நுழைந்து விடுவோம். அந்த அறையில் ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் படுத்திருப்பார்கள். அவர்கள் தங்கள் மீது போர்வை போர்த்தியிருந்தார்கள். மர்ஹூம் செய்யது ஃபஸல் ஷா சாஹிப் அவர்கள் அவர்களது உடலை அமுக்கிக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். வஹீ வருகின்றது என்பதை அவர்கள் உணர்ந்திருந்தார்கள். ஏனென்றால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அந்த வஹீயை அவர்களை எழுத வைத்தார்கள். செய்யது ஃபஸல் ஷா சாஹிப் அவர்கள் சைகையாக எங்களிடம் இங்கிருந்து சென்று விடுங்கள் என்று கூறினார்கள். நாங்களும் வெளியே வந்து விட்டோம். பிறகு ஒரு நீண்ட வஹீ வந்தது தெரிய வந்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் குறிப்பிடுகின்ற இந்த வஹீ ஒரு சம்பவத்துடனும் வழக்குடனும் தொடர்புடையதாகும். அதாவது மிர்ஸா இமாமுத்தீன் போன்றோர் ஒரு சுவரை எழுப்பி வழிப்பாதையை அடைத்தனர். நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பத்தரங்களின் அடிப்படையில் எதிரிகளுக்கு சாதகமாக தீர்ப்பு கூறப்படும் என்று தெரிந்தது. இன்னும் சொல்வதென்றால் வழக்கு விரைவில் முடிந்து விடும் என்று அவர்கள் எல்லோரிடமும் கூற ஆரம்பித்து விட்டனர். ஆனால் அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இதைப்பற்றி எவ்வாறு தெரிவித்திருந்தானோ அவ்வாறு தான் நடந்தது. இறுதி நேரத்தில் பத்தரத்தாழ்களின் எத்தகையதொரு ஆதாரம் கிடைத்ததென்றால் அதன் அடிப்படையில் அந்த நிலத்தின் மீது ஆதிக்கம் செலுத்தி வந்த உரிமை மிர்ஸா இமாமுத்தீன் அவர்களுக்கு மட்டுமின்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்களின் தந்தையான ஹஸ்ரத் குலாம் முர்தஸா சாஹிப் அவர்களுக்கும் இருக்கின்றது என்பது தெரிய வந்தது. இதன் அடிப்படையில் நீதிமன்றம் ஹுஸூர் (அலை) அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பு கூறியது. சுவரை இடிக்குமாறு கட்டளையிட்டது. இந்த வஹீயும் மிகப்பெரும் மகிமையை தன்னகத்தே கொண்டதாக இருக்கின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது சபைகளைப் பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: நாங்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடமிருந்து நேரடியாக சில விஷயங்களை கேட்டோம். அவர்களது குரல் இப்போதும் எங்களது காதுகளில் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றது. அவர்கள் கூறுகின்றார்கள். நான் சிறுவனாக இருந்தேன். அப்போதும் எனது வேலை இதுவாகத் தான் இருக்கும். நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய சபையில் அமர்ந்திருந்தேன். அவர்கள் கூறும் விஷயங்களைக் கேட்பேன். நாங்கள் அவர்களது சபையில் எத்தனை விஷயங்களைக் கேட்டோம் என்றால் நாங்கள் அவர்கள் எழுதிய நூல்களைப் படிக்கும் போது இந்த விஷயங்கள் எல்லாம் நாம் ஏற்கனவே கேட்டிருக்கின்றோம் என்பது தெரிய வரும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது வழக்கம் என்னவென்றால், அவர்கள் எவற்றையெல்லாம் பகலில் எழுதுவார்களோ அவற்றை மாலையில் சபையில் வந்து எடுத்துக் கூறுவார்கள். எனவே, அவர்கள் கூறிய எல்லா விஷயங்களும் எங்களுக்கு மனப்பாடமாக இருந்தது. எனவே, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது நாட்டத்திற்கும் அன்னாரது போதனைக்கும் ஏற்ப இருக்கின்ற இந்த எல்லா கருத்துக்களையும் நாங்கள் நன்றாக புரிந்து கொண்டோம்.

பிறகு உண்மையான ஈமானைப்பற்றி குறிப்பிட்டவாறு ஓரிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள்: ஒரு தாயிடம் அவள் தனது குழந்தைக்கு தொண்டு செய்ய வேண்டும் என்பதற்கான ஆதாரங்களை மட்டும் கூறினால் அதாவது நீ குழந்தைக்கு தொண்டு செய்யாமல் இருந்தால் வீட்டின் அமைப்பு தலைகீழாக மாறி விடும். இது நடக்கும். அது நடக்கும் என்று கூறினால் இந்த ஆதாரம் அவள் மீது ஒரு நிமிடத்திற்கு கூட எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது. தாய்க்கு ஆதாரத்தைக் கூறி குழந்தைக்கு தொண்டு செய்ய வேண்டும் என்று வற்புறுத்த முடியாது. அவள் தனது குழந்தைக்கு தொண்டு செய்கின்றாள் என்றால் அவளது உள்ளத்தில் இருக்கின்ற அன்பின் உணர்வின் அடிப்படையிலேயே அவள் அதை செய்கின்றாள்.

எனவே தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூதாட்டிகளைப் போன்று ஈமான் கொள்வது தான் மனிதனை தடுமாற்றத்திலிருந்தும் காப்பாற்றுகிறது என்று கூறினார்கள். அவ்வாறல்லாமல் எவர்கள் தெளிவுகளையும், அத்தாட்சிகளையும் தேடியவாறு ஒவ்வொரு இடமாக நின்று நின்று செல்கின்றனரோ மேலும் இந்த கட்டளை ஏன் தரப்பட்டிருக்கின்றது ? இதை செய்யும்படி ஏன் கூறப்படுகின்றது ? என்று கேட்கின்றனரோ அவர்களுக்கு சில நேரங்களில் தடுமாற்றம் ஏற்பட்டு விடுகின்றது. அவர்களிடம் எஞ்சியிருந்த ஈமானும் வீணாகிப் போய் விடுகின்றது. முழுமையான ஈமானுள்ள நபர் தனது ஈமானுக்கான அடித்தளத்தை தான் பார்த்தவற்றின் மீது வைக்கின்றார். அவர் மற்றவர்கள் கூறும் ஆதாரங்களை கேட்கவும் செய்வார். ஆனால் அவர்கள் செய்யும் ஆட்சேபனைகளால் ஏற்படும் தாக்கத்தை அவர் ஏற்றுக் கொள்வதில்லை. ஏனென்றால் அவர் இறைவனை தனது ஆன்மீக கண்களால் பார்த்திருக்கின்றார்.

பிறகு அவர்கள் முன்ஷி அரோடே கான் சாஹிப் அவர்களின் உதாரணத்தை எடுத்துக் கூறினார்கள். இவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது ஒரு சஹாபி ஆவார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அவர்கள் சம்பந்தமான ஒரு நகைச்சுவை எனக்கு நினைவில் இருக்கின்றது. (இது பற்றி நான் இதற்கு முன்னரும் பல முறை கூறியுள்ளேன். மீண்டும் இப்போதும் கூறுகின்றேன்.) அவர்கள் இவ்வாறு கூறி வந்தார்கள். பலரும் என்னிடம் நீங்கள் மவ்லவி சனாவுல்லாஹ் அவர்களின் சொற்பொழிவை ஒருமுறை கேட்டால் மிர்ஸா சாஹிப் உண்மையாளரா ? இல்லையா ? என்பது உங்களுக்குத் தெரிந்து விடும் என்று கூறியிருந்தனர். அவர்கள் கூறுகின்றார்கள். ஒருமுறை நான் மவ்லவி சனாவுல்லாஹ் சாஹிப் அவர்களின் சொற்பொழிவை கேட்டேன். அதற்கு பிறகு மக்கள் என்னிடம் இப்போது கூறுங்கள். இவ்வளவு ஆதாரங்களைக் கேட்ட பிறகும் நீங்கள் மிர்ஸா சாஹிபை உண்மையாளர் என்று கருதுகின்றீர்களா? என்று கேட்டனர். அதற்கு நான் ஹஸ்ரத் மிர்ஸா சாஹிபின் முகத்தை நான் பார்த்துள்ளேன். அவர்களது முகத்தை கண்ட பிறகு மவ்லவி சனாவுல்லாஹ் சாஹிப் அவர்கள் எனக்கு முன்னால் நின்று இரண்டு வருடங்கள் வரை சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டிருந்தாலும் கூட அவரது சொற்பொழிவினால் என்மீது எந்த தாக்கமும் ஏற்பட முடியாது. அது ஒரு பொய்யருடைய முகமாகும் என்று என்னால் கூறவே முடியாது. அவர் செய்கின்ற ஆட்சேபனைகளுக்கு எதிரில் ஏதாவதொரு விஷயத்திற்கு எனக்கு பதில் கூற முடியாமல் இருக்கலாம். அவ்வாறிருந்தாலும் கூட ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் உண்மையாளர் என்றே நான் கூறுவேன். எனவே, நுட்பமான ஞானங்களை அறிந்து கொள்ள வேண்டும் என்பது ஒரு முழுமை பெற்ற நம்பிக்கை கொண்டவருக்கு அவசியமானதல்ல. அவரது ஈமான் அறிவின் அடிப்படையில் இருக்காது. மாறாக, அவர் எதை நேரடியாக பார்த்தாரோ அதன் அடிப்படையில் இருக்கும்.

முன்ஷி அரோடே கான் சாஹிப் அவர்களைப் பற்றி இன்னொரு சம்பவம் வருகின்றது. இந்த விஷயத்தை எடுத்துக் கூறுவது அவசியமானதாகும். நாம் நமது இறைவனை நமது ஆன்மீக கண்களால் காண வேண்டும். இது இறைவனுடன் நமது தொடர்பை வளர்த்துக் கொள்வதன் மூலமாகவே ஏற்படும். மேலும் அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை உலகை சீர்திருத்துவதற்காக அனுப்பியுள்ளான் என்ற விஷயத்தின் மீது நமக்கு உறுதியும் இதன் மூலமாகவே ஏற்படும். மேலும் இது காலத்தின் தேவையும் ஆகும். இந்த காலத்தில் ஒரு சீர்திருத்தவாதி தோன்ற வேண்டும் என்பதை காலம் எதிர்பார்க்கின்றது. உலகத்தின் நிலைமையே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைக்கான ஒரு ஆதாரமாக திகழ்கின்றது. இதைத்தவிர வேறு எந்தவொரு ஆதாரமும் தேவையில்லை. ஏனென்றால், இந்த சீர்குலைந்த காலகட்டம் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவிப்பு செய்திருந்தார்கள். எனவே, அல்லாஹ்வுடன் தொடர்பிருந்தால் அல்லாஹ்வின் மீது அச்சமும் இருக்கும். பிறகு அதிகமான அடையாளங்களையும், அற்புதங்களையும் பார்க்க வேண்டிய அவசியம் இருக்காது. ஆதாரங்களின் தேவை இருக்காது. அற்புதங்களைக் கோர வேண்டிய அவசியம் இருக்காது. காலத்தின் தேவையும், அவர்களது வாழ்வின் ஒவ்வொரு நொடியும் அவர்களது உண்மைக்கு ஆதாரமாக திகழ்கின்றன. எனவே நாம் இதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். இந்த வகையில் நமது ஈமானையும் வலுப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். இந்த காலத்தில் தேவை தொடர்பான இந்த உணர்வு மற்ற முஸ்லிம்களுக்கும் ஏற்படும்படி இறைவன் செய்வானாக. அதன் மூலம் அவர்கள் காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவர்களைப் பற்றி குறிப்பிட்டவாறு ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: மர்ஹூம் முன்ஷி சாஹிப் அவர்கள் ஒரு நீதிபதியின் கீழ் பணிபுரிந்து வந்தார்கள். மாதத்திற்கு ஒரு முறை காதியான் வந்து விடுவார்கள். ஒரு வாரத்தில் சில நாட்கள் விடுமுறைக்காக கிடைக்காத வரை அவர்கள் விடுமுறையிலிருந்தும் முழுமையாக பயனடைய முடியாது. எனவே, சனிக்கிழமையன்று அவர்களது அதிகாரி இன்று வேலையை சீக்கிரம் முடித்து விட வேண்டும். ஏனென்றால் முன்ஷி சாஹிபிற்கு காதியான் செல்ல வேண்டியதுள்ளது. அவ்வாறு அவர் செல்ல முடியாமல் போய் விட்டால் அவரது உள்ளத்திலிருந்து எத்தகைய பெருமூச்சு எழும் என்றால் அதன் விளைவாக நான் அழிந்து போய் விடுவேன் என்று கூறுவார். இவ்வாறு எப்போதும் சரியான சமயத்தில் அவர்களை விடுவித்து விடுவார். அதிகாரி இந்துவாக இருந்தாலும் கூட முன்ஷி சாஹிப் அவர்களது நன்மை, இறையச்சம், அவர்களது துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவது ஆகியவற்றின் தாக்கம் அந்த அதிகாரி மீது எந்த அளவிற்கு இருந்தது என்றால் அந்த அதிகாரி தாமாகவே முன் வந்து அன்னார் காதியான் செல்வதற்கான நேரத்தை ஒதுக்கித்தந்து விடுவார். மேலும் இவர் காதியான் செல்ல முடியாமல் ஆகிவிட்டால் இவரது உள்ளத்திலிருந்து எத்தகைய பெருமூச்சு எழும் என்றால் அதிலிருந்து நான் தப்ப முடியாது என்றும் அவர் கூறி வந்தார்.

ஆக, இது தான் அந்த பெரியவர்கள் அன்னியர்கள் மீது ஏற்படுத்தியிருந்த தாக்கமாகும். ஏனென்றால், அந்த சஹாபாக்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது முகத்தை கண்டிருந்தனர். அதன் காரணமாக கலப்பற்ற மனத்தூய்மையில் முன்னேறி இருந்தனர். அல்லாஹ்வுடன் அவர்களுக்கு ஒரு தொடர்பு இருந்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு மனிதன் அல்லாஹ்வுடன் எவ்வாறு நடந்து கொள்கின்றானோ அவ்வாறே அல்லாஹ்வும் அவருடன் நடந்து கொள்கின்றான். எந்த வகையில் ஒரு மனிதன் தனது

உள்ளத்தை அந்த இறைவனுக்காக உருக்கி விடுகின்றானோ அது போன்றே அல்லாஹ்வும் அவனுடன் நடந்து கொள்கின்றான். உலகம் அவனை அடிக்கின்றது. அவனை ஏசுகின்றது. அவனை அமுக்க முயற்சி செய்கின்றது. ஆனால், ஒவ்வொரு முறை அமுக்கப்பட்ட பிறகும் அவர் பந்து போன்று மீண்டும் மேலே வந்து விடுகின்றார். அத்தகைய நம்பிக்கை கொண்டவரை எல்லா வகையான தடைகள் இருந்தும் கூட அல்லாஹ் முன்னேறும்படி செய்கின்றான். இத்தகைய நபர்களுள்ள ஜமாஅத்தே முன்னேற்றத்தைப் பெறுகின்றது. எனவே, உங்களது உள்ளங்களை இவ்வாறு ஆக்கிக் கொள்ளுங்கள். ஜமாஅத்திற்காக இத்தகைய ஒரு அன்பை உள்ளத்தில் உருவாக்குங்கள். பிறகு அல்லாஹ் உங்களை எவ்வாறு வளர்ச்சியடையச் செய்கின்றான் என்பதைப் பாருங்கள். எவர்கள் இறைவனுக்காக ஆகிவிடுகின்றனரோ அவர்கள் எதையும் கேட்க வேண்டியது கூட வராது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தொடர்ந்து கூறுகின்றார்கள்: அவர்கள் துஆ செய்வதேயில்லை என்பது இதற்குப் பொருளல்ல. அவர்கள் அல்லாஹ்விடம் கொண்டுள்ள தொடர்பின் காரணமாக அவரிடம் இவ்விஷயத்தில் பெருமிதம் கொள்ளக் கூடியவர்களாக இருக்கின்றனர். அல்லாஹ் சுயமே எங்களது தேவைகளை நிறைவேற்றுவான் என்று அவர்கள் கருதுகின்றனர். இந்த அந்தஸ்து சாதாரணமாக ஒருவருக்கு கிடைத்து விட முடியாது. நீங்கள் இப்படியே இருந்து கொண்டு உங்களது உள்ளங்களில் அன்பை ஏற்படுத்தாமலும், தொழுகைகளில் பனிவையும், உருக்கத்தையும் ஏற்படுத்தாமல், சந்தாக்களை முறையாக கொடுக்காமலும், தான தர்மங்களை செய்யாமலும், பொய் கூறியும், ஏமாற்றியும் இவற்றையெல்லாம் செய்த பிறகும் நீங்கள் அல்லாஹ்வின் அருள்களுக்கு நாம் வாரிசாகி விடலாம் என்று ஒருபோதும் எண்ணாதீர்கள்.

அல்லாஹ்வுடனுள்ள தொடர்பு எத்தகைய அடையாளங்களை காட்டுகின்றன. இது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடமிருந்து இதைக் கேட்டுள்ளேன். ஒருமுறை ஹாரூன், ரஷீது அவர்களின் காலகட்டத்தில் ஒரு பெரியவர் இருந்தார். அவர் அஹ்லே பைத் அதாவது பெருமானார் (ஸல்) அவர்களின் குடும்பத்தைச் சார்ந்தவராக இருந்தார். அவரது பெயர் மூஸா ரிஸா ஆகும். அவர் மூலமாக குழப்பம் உருவாக வாய்ப்பு இருக்கின்றது என்று கூறி அவரை கைது செய்து விட்டனர். ஒரு நாள் பாதி இரவில் ஒரு சிப்பாய் அவர் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற கட்டளையை செயல்படுத்துவதற்காக சிறைச்சாலையில் அவரை சந்திக்க சென்றார். அந்த பெரியவர் மிகவும் வியப்படைந்தார். இவ்வாறு உடனடியாக நான் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற கட்டளை எவ்வாறு பிறப்பிக்கப்பட்டது என்று கேட்டார். அந்த பெரியவர் அரசரை சந்தித்தார். என்ன நடந்தது ? நீங்கள் திடீரென்று என்னை விடுதலை செய்து விட்டீர்களோ. ஏன் ? என்று கேட்டார். அதற்கு அந்த அரசர் இதற்கான காரணம் இதுவாகும். நான் தூங்கிக் கொண்டிருந்தேன். கனவில் யாரோ ஒருவர் வந்து என்னை தட்டி எழுப்புவதை பார்த்தேன். அதற்கு நான், நீங்கள் யார் ? என்று அவரிடம் கேட்டேன். அவர்கள் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் ஆவார்கள் என்பது எனக்குத் தெரிய வந்தது. நான் உங்களது கட்டளை என்ன ? என்று கேட்டேன். அதற்கு அவர்கள் ஹாரூன் ரஷீதே ! இது என்ன நடக்கின்றது ? எனது மகன் சிறைச்சாலையில் இருக்கின்றார். நீயோ சுகமாக தூங்கிக் கொண்டிருக்கின்றாய் என்று கேட்டார்கள். இதைக் கேட்டு எனது உள்ளத்தில் எத்தகைய உருக்கம் ஏற்பட்டதென்றால் நான் உடனடியாக உங்களை விடுவிப்பதற்கான கட்டளையை பிறப்பித்தேன் என்று ஹாரூன் ரஷீது கூறினார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைப் பேரன்பர்களில் ஒருவராக முன்ஷி அரோடே கான் என்ற அந்த சஹாபி இருந்தார்கள். ஒவ்வொரு ஜுமுஆவிலும் அவ்வாறே ஞாயிற்றுக்கிழமைகளிலும் முயற்சி செய்து காதியான் செல்வது இவரது வழக்கமாக இருந்தது. எப்போது விடுமுறை கிடைத்தாலும் அவர்கள் காதியான் வந்து விடுவார்கள். அவ்வாறு அவர்கள் வரும் போது தமது பயணத்தின் ஒரு பகுதியை நடந்தே அவர்கள் கழிப்பார்கள். அதன் மூலம் கொஞ்சம் தொகை அவர்களுக்கு மிச்சப்படும். அந்த தொகையை அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் கொடுப்பார்கள். அவர்களுக்கு மிகக் குறைந்த சம்பளமே அப்போது இருந்து வந்தது. ஏறக்குறைய 15 அல்லது 20 ரூபாய் அவர்களது சம்பளமாக இருந்தது. அதில் தமது தேவைகளையும் நிறைவேற்றிக் கொண்டு பயணத்திற்கான செலவையும் அதிலிருந்தே செலவழித்து வந்தார்கள். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடமும் காணிக்கையாக சிறிது தொகையை வழங்கி வந்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் எப்போதும் அவர்களை ஒரு கோட் மட்டுமே அணிந்திருப்பதை பார்த்துள்ளேன். அவர்களது முழு வாழ்நாளிலும் அதைத்தவிர வேறொரு கோட்டை அவர்கள் அணிய நான் கண்டதேயில்லை. அவர்கள் வேட்டி அணிந்திருப்பார்கள். மேலங்கி ஒன்றையும் அணிந்திருப்பார்கள். அவர்கள் மெதுமெதுவாக கொஞ்சம் தொகையை ஒன்று சேர்த்து தமது பற்றை வெளிப்படுத்தும் முகமாக காணிக்கையாக அதை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வழங்க வேண்டும் என்ற பெரிய விருப்பம் அவர்களுக்கு இருந்தது. படிப்படியாக தனது நேர்மையிலும் அவர்கள் முன்னேறிக் கொண்டே அவர்கள் சென்றார்கள். தாசில்தாராகவும் அவர்கள் ஆகிவிட்டார்கள்.

பிறகு அவர்கள் தொடர்பாக அந்த புகழ்பெற்ற சம்பவத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது வஃபாத்திற்குப் பிறகு ஒரு முறை

என்னிடம் வந்தார்கள். என்னை வெளியே அழைத்தார்கள். மிகவும் அதிகமாக அழ ஆரம்பித்தார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். அதற்கு என்ன காரணம் என்று எனக்கு தெரியவில்லை. அதற்குப் பிறகு அவர்கள் மூன்று அல்லது நான்கு தங்க நாணயங்களை எடுத்து என்னிடம் தந்தார்கள். நான் இதனை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு கொடுப்பதற்காக எண்ணியிருந்தேன். ஆனால் அதற்கான நல்வாய்ப்பு எனக்கு கிடைக்காமல் போய் விட்டது. ஆனால், அதற்கான நல்வாய்ப்பு எனக்கு கிடைத்த சமயத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த உலகில் இல்லை என்று கூறி மீண்டும் அழ ஆரம்பித்து விட்டார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இதுவே பேரன்பாகும். இந்த உலகிலுள்ள அருள்கள் தான் உண்மையில் அருள்கள் என்றால் அவற்றிலிருந்து உண்மையிலேயே நமக்கு சுகம் கிடைக்குமென்றால் பிறகு ஒரு நம்பிக்கை கொண்டவரின் உள்ளம் அவற்றை பயன்படுத்துகின்ற போது கண்டிப்பாக துக்கமடைகின்றது. இவை உண்மையில் அருள்கள் என்றால் அது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு கிடைப்பதற்கு தகுதியுள்ளவையாக இருந்திருக்க வேண்டும். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களைப் பற்றி ஒரு சம்பவம் வருகின்றது. மென்மையான கோதுமை மாவில் செய்யப்பட்ட ரொட்டி அவர்களுக்கு கிடைத்த போது இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் எங்களுக்கு கிடைக்கவில்லை என்று எண்ணி அவர்களின் கண்களில் கண்ணீர் வந்தது. ஏனென்றால், உண்பதற்கு கடினமாக இருக்கின்ற கடினமான கோதுமை மாவு தான் பெருமானார் (ஸல்) அவர்களது காலத்தில் இருந்தது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது தனக்கு இருந்த பேரன்பு பற்றியும் ஒரு சம்பவத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: இந்த உலக அருள்கள் உண்மையிலேயே அருள்கள் என்றால் அவை பெருமானார் (ஸல்) அவர்களுக்கு கிடைத்திருக்க வேண்டும். அதற்கு பிறகு அவை அவர்களின் பிரதிபிம்பமாக தோன்றிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கும் கிடைத்திருக்க வேண்டும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் சிறுவனாக இருந்தேன். அப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது காலத்தில் எனக்கு வேட்டையாடுவதில் ஆர்வம் உருவானது. ஒரு Air Gun என்னிடம் இருந்தது. அதன் மூலம் வேட்டையாடி அந்த வேட்டையை நான் வீட்டிற்கு கொண்டு வருவேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் உணவு மிகக் குறைவாகவே உண்டு வந்தார்கள். மூளையை பயன்படுத்தி அதிகமான அறிவு சார்ந்த வேலைகளை அவர்கள் செய்து வந்தார்கள். நானே அவர்களிடமிருந்தோ அல்லது வேறொரு மருத்துவரிடமிருந்தோ வேட்டையாடப்பட்ட பறவைகளின் மாமிசம் மூளையை பயன்படுத்தி அதிகமாக பணிகளை செய்பவர்களுக்கு மிகவும் நல்லது என்று கேள்விப்பட்டிருந்தேன். எனவே நான் எப்போதும் வேட்டையாடியவற்றை அவர்களது சமூகத்தில் கொண்டு வந்து அவர்களிடம் கொடுத்து விடுவேன். ஒரு மனிதனுக்கு தான் நேசிப்பவருடன் முழுமையான அன்பு ஏற்படும் போது அவர் எந்த பொருளையும் சுகத்தை தரக்கூடியதாக கருதுவதே இல்லை. எந்த பொருளையாவது அது சுகத்தை தரக்கூடியது என்று அவர் கருதினால் பிறகு தான் யாரை நேசிக்கின்றாரோ அந்த பொருளில் அந்த அன்பருக்கே உரிமை இருக்கின்றது என்று அவர் கருதுகின்றார்.

ஹுக்காவிற்கு அடிமையான ஒரு நபர் காதியானை விட்டு ஓடிவிட்ட சம்பவத்தை குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள். அந்த நபருக்கு ஹுக்கா குடிப்பதன் காரணமாகவே போதையின் பழக்கம் இருந்தது. அதனாலேயே அவருக்கு காதியானின் சுற்றுச் சூழலானது துன்பம் தரக்கூடியதாக ஆகி விட்டது. ஒரு போதைப் பழக்கம் இருந்ததன் காரணமாக மார்க்க அறிவை கற்பதிலிருந்தும் அவர் விலகி விட்டார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது நட்பிலிருந்தும் பயனடைவதிலிருந்தும் அவர் விலகி விட்டார். எனவே, போதைப் பொருட்களை பயன்படுத்துகின்வர்களுக்கு இதில் படிப்பினை இருக்கின்றது.

இப்போது உலகில் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலைமைகளைப் பற்றி சுருக்கமாக எடுத்தக் கூற இருக்கின்றேன். எந்த அளவு விரைவாக உலகம் அழிவை நோக்கி செல்கின்றதென்றால் அதை கருத்தில் கொண்டவாறு ஜமாஅத் சகோதரர்கள் மிக அதிகமாக துஆ செய்ய வேண்டும். ஈராக்கிலும் சிரியாவிலும் நிலைநாட்டப்பட்டுள்ள பெயர் தாங்கி இஸ்லாமிய ஆட்சிகளுக்கு எதிராக மேற்கத்திய அரசாங்கங்கள் தற்போது பிரான்ஸில் நடைபெற்ற கொடூரமான சம்பவத்திற்குப் பிறகு கடுமையான எதிர்நடவடிக்கையை எடுக்க வேண்டும் என முடிவு செய்துள்ளனர். விமான தாக்குதல் நடத்தவதற்காக திட்டம் தீட்டியுள்ளனர். மாறாக, தாக்குதலை ஆரம்பித்து விட்டனர். இந்த அரசாங்கங்கள் இவ்வாறான தாக்குதல்களை நடத்த வேண்டுமென்றால் பிறகு அநீதி இழைத்தவர்கள் மீது அந்த தாக்குதலை தொடுக்க வேண்டும். அந்த தாக்குதல்களிலிருந்தும் அல்லாஹ் அப்பாவிகளையும், பொது மக்களையும் பாதுகாப்பாக வைப்பானாக. சிரியா போன்ற இடங்களில் வசிக்கின்ற பெரும்பாலார் ஒரு ஆட்டுரலில் அரைக்கப்படுகின்றனர். அவர்கள் இங்கு செல்வதற்கும் வழியில்லை. அங்கு செல்வதற்கும் வழியில்லை. பிறகு பக்கத்திலுள்ள முஸ்லிம் நாடுகள் கூட இந்த குழப்பத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு எந்த நல்ல நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. பக்கத்திலுள்ள நாடுகள் ஒன்று சேர்ந்து அங்குள்ள அரசாங்கத்திற்கு உதவி செய்து இந்த குழப்பத்தை முடிவுக்கு கொண்டு வந்திருக்க வேண்டும். அவர்கள் இந்த குழப்பத்தை வளர விட்டுவிட்டனர். எதுவரையென்றால், இந்த தீங்கு முழு உலகிலும் பரவி விட்டது. இப்போதும்

கூட பக்கத்திலுள்ள இஸ்லாமிய நாடுகள் இந்த பெயர் தாங்கி இஸ்லாமிய அரசாங்கத்துடன் வியாபாரம் செய்து வருகின்றனர் என்று கூறப்படுகின்றது. அவர்களிடமிருந்து பெட்ரோல் போன்றவற்றை வாங்குகின்றனர். ரஷ்யா துருக்கி மீது குற்றம் சுமத்துகின்றது. துருக்கி அதை மறுக்கின்றது. அது ரஷ்யாவின் மீது குற்றம் சுமத்துகின்றது. எந்நிலையிலும் ஏதோ நடந்து கொண்டிருக்கின்றது. வியாபாரம் நடக்கின்றது. இதைப்பற்றி பல வருடங்களாக நான் கூறி வருகின்றேன். இந்த விமான தாக்குதலில் மேற்கத்திய உலகுடன் ரஷ்யாவும் பங்கு பெற்றிருக்கின்றது. ரஷ்யாவிற்கு மேற்கத்திய உலகுடன் கருத்து வேறுபாடு இருந்தாலும் சரியே. ரஷ்யா சிரியாவிலுள்ள பஷருல் அஸதின் அரசாங்கத்திற்கு ஆதரவாக நிற்கின்றது. எஞ்சியிருக்கும் உலகம் அவர்களுக்கு எதிராக நிற்கின்றது. ஆனால் எந்நிலையிலும் இப்போது தாயிஷ் தீவிரவாதிகள் தான் இந்த இரு சாரார்களின் பொதுவான இலக்காக இருக்கின்றது. ஆனால் இவ்வாறிருந்தும் கூட நான் ஏற்கனவே கூறியது போன்று இவர்களுக்கிடையில் கருத்து வேறுபாடும் இருந்து வருகின்றது. சீனா, ரஷ்யாவிற்கு உதவி செய்வதாக அறிவிப்பு செய்திருக்கின்றது. சிரியாவினுடைய அரசாங்கம் ஐரோப்பாவின் விமான தாக்குதல் நம்முடன் சேர்ந்து நடைபெறாத வரை அதனால் எந்த பலனும் ஏற்படப் போவதில்லை என்று கூறுகின்றது. ரஷ்யாவின் ஒரு விமானத்தை துருக்கி கீழே விழச் செய்தது. அதற்குப் பிறகுள்ள தாக்கங்களினால் பகைமையின் வெளிப்பாடும் அது பற்றிய அறிவுப்புகளும் அதிகமாக இருந்து வருகின்றன.

இந்த பெயர் தாங்கி இஸ்லாமிய அமைப்பானது இவ்வாறும் ஒரு திட்டம் தீட்டியிருப்பதாக நாம் கேள்விப்படுகின்றோம். ஈராக்கிற்கு சிரியாவின் பகுதியை விட்டு விட்டு செல்ல வேண்டியது வந்தால் பிறகு நாங்கள் லிபியாவில் எங்களது தங்குமிடத்தை அமைத்துக் கொள்வோம். பிறகு இதன் விளைவுகள் எவ்வாறு வெளிப்படும். இந்த மக்கள் இவ்வாறு செயல்பட முற்பட்டால் பிறகு விமானத் தாக்குதல் லிபியாவிலும் ஆரம்பமாவது தொலைவில் இல்லை. பிறகு இதன் விளைவாக பொது மக்கள் மரணிப்பார்கள். மேற்கத்திய நாடுகள் முதலில் இதே அரசாங்கங்களுக்குத் தான் உதவிக் கொண்டு இருந்தன. இப்போது லிபியா, சிரியா, ஈராக் போன்ற நாடுகளுக்கு எதிராக இவர்கள் ஆகிவிட்டனர். அரசாங்கங்களுக்கு எதிராக செயல்பட்டு ஒன்று ஆட்சியை கவிழ்த்துகின்றனர். அல்லது ஆட்சியை கவிழ்த்துவதற்கு முயற்சி செய்து வருகின்றனர்.

இவையெல்லாம் ஒரு நீண்ட காலமாக நீதியுடன் செயல்படாததினால் ஏற்பட்ட விளைவாகும். இதன் காரணமாக உலகில் குழப்பம் பரவியுள்ளது. துர்பாக்கிய நிலை என்னவென்றால் முஸ்லிம் அரசாங்கங்கள் கூட தங்களது நாடுகளில் அநீதியில் ஈடுபட்டு வருகின்றனர். எந்த அளவு சிக்கலான நிலைமை உருவாகி இருக்கின்றதென்றால் உலகப்போரின் நிலை உருவாகி விட்டது. இன்னும் சொல்வதென்றால் சிறிய அளவில் உலகப் போர் ஆரம்பமாகி விட்டது என்றே கூற வேண்டும். எதுவரை என்றால் இதைப்பற்றி ஆய்வு செய்த பலரும், கருத்துக்கள் கூறுகின்ற பலரும் உலகப் போர் ஆரம்பித்து விட்டது என்று எழுத ஆரம்பித்து விட்டனர். இந்த விஷயத்தின் பக்கம் கடந்த பல வருடங்களாக நான் கவனமூட்டி வருகின்றேன். ஆனால் இப்போது இவர்களும் கூட இதுபோன்ற விஷயங்களை பேச ஆரம்பித்து விட்டனர். ஆனால் இப்போதும் கூட நீதியுடன் நடந்து கொள்வதன் பக்கம் கவனம் செலுத்த மாட்டார்கள் என்றே தோன்றுகின்றது. பெரும் சக்திகளுக்கும் இதன் பக்கம் கவனம் இல்லை. முஸ்லிம் அரசாங்கங்களுக்கும் இதன் பக்கம் கவனம் இல்லை. வெளிப்படையாக பார்க்கும் போது இந்த பெயர் தாங்கி இஸ்லாமிய அரசாங்கத்திற்கு எதிராக எல்லோரும் ஒன்றுகூடி செயல்படுகின்றனர் என்பது போன்று தெரிகின்றது. இந்த அரசாங்கத்தை அழித்துவிட்டால் அமைதியின் நிலைமை ஏற்பட்டு விடும் என்று இவர்கள் நினைக்கின்றனர். சில நிலைமைகள் இதன் பக்கம் சுட்டிக்காட்டக் கூடியவையாக இருக்கின்றன. இந்த அரசாங்கம் அழிக்கப்பட்டு விட்டாலும் கூட அங்குள்ள நிலைமைகள் சரியாகாது. மாறாக, இதற்குப் பிறகு பெரும் சக்திகளுக்கிடையில் பரஸ்பரம் இழுபறி நிலை ஏற்படும். இதனால் போர் ஆரம்பமாவது தொலைவில் ஒன்றுமில்லை. ஏனென்றால் ரஷ்யா மற்றும் ஏனைய மேற்கத்திய சக்திகளுக்கிடையில் பகைமை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. பிறகு இதனால் பெரும்பாலும் பொது மக்களே மரணிப்பர். இதுவரை நாம் இவ்வாறு தான் பார்த்துள்ளோம். பொது மக்களும் அப்பாவிகளும் மரணிக்கின்றனர். எனவே மிகவும் அதிகமாக துஆ செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது. அல்லாஹ் உலகை அழிவிலிருந்தும் காப்பாற்றுவானாக. இதைத்தவிர முன்னெச்சரிக்கையாக திட்டமிட்டு செயல்படுவது குறித்து நான் கடந்த வருடம் ஜமாஅத்திற்கு கவனமூட்டியுள்ளேன். இதன் பக்கமும் கவனம் செலுத்துங்கள். சுருக்கமாக சில விஷயங்களின் பக்கம் நான் சுட்டிக்காட்டி இருக்கின்றேன். மீண்டும் நான் கவனமூட்டுகின்றேன். துஆக்கள் செய்வதன் பக்கம் அதிகம் கவனம் செலுத்துங்கள். அல்லாஹ் இந்த அரசாங்கங்களுக்கும் பெரும் சக்திகளுக்கும் அறிவை வழங்குவானாக. அவர்கள் உலகை அழிவின் பக்கம் கொண்டு செல்லாமல் இருக்கட்டும்.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 04.12.2015
Tamil Translation : Moulavi. M. Rafique Ahmed Sb
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516